# செல்வகலை அருவி

திருமதி. கலையரசி செல்வராசா
Primary (Trd)
B.Ed
SLTS - 1



## மணி விழா மலர்

வெளியீடு :
கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்
2022.01.01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வ கலை அருவி

## மணி விழா மலர்

**திருமதி. கலையரசி செல்வராசா**
**Primary (Trd)**
**B.Ed**
**SLTS - 1**

வெளியீடு
கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்
2022.01.01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் முகம்

நூலின் பெயர் : செல்வகலைஅருவி

நூலின் வகை : மணிவிழா மலர்

வெளியீடு : கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய ஆசிரியர் நலன்புரிச் சங்கம்

பதிப்புரிமை : மலர்க்குழு

பதிப்பு : சிவா பதிப்பகம், கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

பக்கங்கள் : 46

பதிப்பு : 2021 மார்கழி

கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி/ கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய
## பிரதி அதிபர்
## திருமதி கலையரசி செல்வராசா அவர்களின்
## மணி விழாவிற்கு விழாக்குழு

தலைவர்
**திரு சி.கேதீஸ்வரன்**
(அதிபர்)

**மலர்க்குழு**

செல்வி. சி.கவிப்பிரியா
திருமதி. கு.தவராசா
திருமதி. ஜெ.உதயகுமார்
திருமதி. சி.பிரபாகரன்
திருமதி. ய.சுதாஸ்கரன்
திருமதி. மா.செபஸ்ரீபன்
திருமதி. ல.கலைரஞ்சன்
திருமதி. அ.இராமேஸ்வரன்

**மணிவிழா செயற்குழு**

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பணியாளர்கள், பழைய மாணவர்கள்,
பெற்றோர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

இராகம் : மாண்டு　　　　தாளம் : ஆதி

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்ததனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்கதமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

வாழ்க என்றும் வளமுடன் எங்கள் வித்தியாலயம்
வான்புகழ் ஓங்கியே வாழ்க வாழ்கவே
வான்புகழ் ஓங்கியே வாழ்க வாழ்கவே

(வாழ்க)

மத்திய ஆரம்ப வித்தியாலயம்
மாணவர் நலன் ஓம்பும் வித்தியாலயம்
தேர்ச்சி நிறை கல்வியினைத் தினமும் வழங்கியே
தேசத்தின் பிள்ளைகளை வளர்க்கும் ஆலயம்

(வாழ்க)

அன்பும் அறிவும் நிறைந்த அதிபர் ஆசிரியர் அரவணைப்பில்
ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் பயின்றிடுவோம்
வல்லவராய் நல்லவராய் வாழ வைக்கும் அன்னையின்
தாழ் பணிந்து தனித்துவமாய் உயர்ந்திடுவோமே

(வாழ்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- ஆசிச்செய்தி
- வாழ்த்துச் செய்திகள்

  **திரு. சி.கேதீஸ்வரன்**
  (கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்பவித்தியாலய அதிபர்)
  **திரு. பா.வாசுதேவன்**
  பிரதிக் கல்விப் பணிப்பாளர் (பொது நிர்வாகம்),
  வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி தெற்கு.)
  **திரு. சு.தர்மரத்தினம்**
  (கோட்டக்கல்விப் பணிப்பாளர், கரைச்சி)
  **திரு. அ.இரவீந்திரன்**
  (உதவிக் கல்விப்பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி),
  வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி தெற்கு.)
  **திரு. க.பாலகணேசன்**
  (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (ஆங்கிலம்),
  வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி தெற்கு.)
  **திரு. பா.ஸ்ரீஸ்குமார்**
  (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக்கல்வி),
  வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி தெற்கு.)
  **திரு. தி.சிவரூபன்,**
  (ஆசிரிய ஆலோசகர் (வர்த்தகம்), வலயக்கல்வி அலுவலகம்,
  கிளிநொச்சி தெற்கு.)
  **திரு.ப.சசிரதன்**
  (செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர்,
  வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி தெற்கு.)
  **திருமதி. கா.சிவகரன்**
  (அதிபர் - கிளி/உருத்திரபுரம் ம.வி)
  **திரு. சிவஞானம்**
  (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (ஆங்கிலம்),
  வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி தெற்கு.)
  **திரு. வை.தனிநாயகம்**
  (ஓய்வு நிலை அதிபர், கிளி/இராமநாதபுரம் ம.வி.)
  **திரு.ச.புண்ணியமூர்த்தி**
  (அதிபர் - கிளி/இராமநாதபுரம் ம.வி)
  **பிரசாத்நாயகம் மார்ஷல்**
  (செயலாளர், பாடசாலை அபிவிருத்தி சபை,
  கிளி/கிளிநொச்சி ம.ஆ.வி)
- திருமதி. கலையரசி செல்வராசா அவர்களின் வாழ்வியல் தடம் - ஒரு பார்வை
- மணிவிழா வாழ்த்து
- சக ஆசிரியர்களின் உள்ளத்தில் இருந்து...
- உளம் நிறைந்த நன்றிகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கிளி/ கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் பிரதி அதிபராகவும் ஆங்கில ஆசிரியராகவும் தன் கடமையைச் செய்து வந்த திருமதி கலையரசி செல்வராசா அவர்கள் புன்னகையும், சுறுசுறுப்பும், இனிமையான சொற்பிரயோகமும் கொண்டவராக பாடசாலையில் தனது சேவையினை இனிதே புரிந்தவர். எல்லோர் இதயங்களையும் ஈர்த்தெடுத்த நாயகிக்கு அகவை அறுபது நிறைவில் மணிவிழா என்பது வயதிற்கு வழங்கும் நிகழ்வன்று அவர் செய்த பணிக்கு செய்யும் பாராட்டாகும். அவர் கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலையில் முதல் நியமனம் பெற்று கிளி/இராமநாதபுரம் ம.வி யிலும் ஆரம்பக் கல்வி மற்றும் ஆரம்பக் கல்வி ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிய துடன் 2002 தொடக்கம் 2004 காலப்பகுதியில் போரால் பதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வித்தர மேம்பாட்டிற்காக வளவாளராகவும், ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான ஆங்கில மொழிவிருத்தி செயற்றிட்டத்தில் (PIMD) ஆசிரியர்களுக்கான வளவாளராக 2011, 2012 இலும் பணியாற்றியுள்ளார். இவரது சேவையைப் பாராட்டி செல்வ கலை அருவி எனும் மணிவிழா மலரை வெளியிடுவதில் மலர்க்குழு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறது.

இவர் எமது வித்தியாலயத்தில் 10.01.2011 இல் கடமைப் பொறுப்பேற்று பணியாற்றிய காலத்தில் இருந்து கற்பித்தல் நடவடிக்கைக்கு மேலதிகமாக இணைபாட விதான செயற்பாடுகளிலும் நிர்வாகம் சார் விடயங்களிலும் முன்னின்று உழைத்தவர். இவரது ஓய்வுக் காலம் சிறக்க செல்வ கலை அருவி மலர் மணம் பரப்பி வாழ்த்தட்டும் வாழ்க.

**மலர்க்குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணி விழா ஆசிச்செய்தி

*உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்*
*அனைத்தே புலவர் தொழில்* *குறள் - 394*

திருமதி கலையரசி செல்வராசா அவர்கள் 1962.01.01 பூமிப்பந்தில் தன் வாழ்க்கைப் பயணம் ஆரம்பித்து தன் வாழ்க்கையில் ஆரம்பக்கல்வியை யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தில் பயின்று உயர் கல்வியை யா/வேம்படி மகளிர் கல்லூரியில் பயின்று கூடவே நல்லொழுக்கம், அன்பு, பண்பு, பணிவு, துணிவு இவைகளை தன் வாழ்க்கையில் அங்கமாகக் கொண்டு நல்லற இல்லறத்தில் நான்கு பிள்ளைச் செல்வங்களைப் பெற்று கல்வியால் அவர்களை உயரச் செய்து கூடவே தானும் உயர்ந்து 1992ஆம் ஆண்டு முதல் நியமனம் பெற்றார். 2011 ஆம் ஆண்டு முதல் கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் ஒரு தசாப்தமாகக் கடமையாற்றி அதிபர், சக ஆசிரியர்களையும், மாணவர்களையும் மகிழ்வித்து தானும் மகிழ்ந்து காணும் மணிவிழா நாயகியை வாழ்த்தி இறை அருள் வேண்டி ஆசி கூறி மகிழ்ந்த நன்னாளாம் இந் நாள்.

சுபமஸ்து
நன்றி

**சிவஶ்ரீ அமிர்த ஶ்ரீ காந்தக்குருக்கள்,**
**ஜெயதுர்க்கை அம்மன் ஆலயம்,**
**ஆனந்தபுரம் மேற்கு, கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபரின் வாழ்த்துச் செய்தி

எமது வித்தியாலயத்தில் பதினொரு வருடங்களாக சேவையாற்றி இன்று ஓய்வு பெறும் எமது பிரதி அதிபர் திருமதி கலையரசி செல்வராசா அவர்கள் எமது மாவட்டத்தில் இருபத்தொன்பது வருடங்களாகக் கல்விச் சேவையாற்றி அரும் பெரும் பணியை செவ்வனே நிறைவேற்றியுள்ளார். இவரது மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன். அன்பும் அமைதியும் உடைய ஆசிரியர் மட்டுமன்றி மகிழ்வாகவும் மாணவர்களுடன் பழகி தனது கற்பித்தல் நடவடிக்கையை செவ்வனே செய்து வந்துள்ளார். அத்துடன் பாடசாலை நிர்வாகப் பணியிலும் சிறப்புடன் செயற்பட்டு அனைவரோடும் சேர்ந்து பயணித்துள்ளார். எமது பிரதேசம் வரலாற்றில் எப்போதுமே கல்வி தொடர்பில் பல்வேறு இடர்களும், சவால்களும் நிறைந்ததாகவே காணப்பட்டு வந்துள்ளது. அக்காலங்களில் எல்லாம் மாணவர்களின் தேவையறிந்து கற்பித்தல் செயற்பாட்டை செவ்வனே செய்து மாணவர் சமூகம் முன்னேற அயராது உழைத்துள்ளார்.

"பயன்றூக்கார் செய்த உதவி நயன்றூக்கி
நன்மைக் கடலிற் பெரிது"

எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க தன்னலம் அற்ற சேவையினால் அவரது பிள்ளைகள் மேலான கல்விச் செல்வத்தைப் பெற்று உயர்வடைந்துள்ளனர். இவரது சேவையினைப் பாராட்டுவதுடன் ஓய்வுக் காலம் சிறப்புறவும் நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழவும் மணிவிழா நாளில் மனதார வாழ்த்துகின்றேன்.

**திரு.சி.கேதீஸ்வரன்,**
**அதிபர்,**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணிவிழாக் காணும் திருமதி. கலையரசி செல்வராசா அவர்களுக்கான வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் உள்ள கரைச்சிக் கோட்டத்தில் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம் 2011 இல் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் ஆசிரியராகச் சேவையாற்றி இன்று 31.12.2021 இல் சேவையில் இருந்து ஓய்வு பெறும் காலம் வரை திருமதி கலையரசி செல்வராசா அவர்கள் தனது பணியை செவ்வனே நிறைவேற்றியுள்ளார். ஓய்வு பெறும் காலத்தில் பாடசாலையின் பிரதி அதிபராக தனது சேவையை முழுமையாக வழங்கியிருப்பது போற்றப்பட வேண்டிய விடயமாகும். எப்போதும் மலர்ந்த முகத்துடன் வரவேற்கும் பண்பு கொண்ட இவர் பொறுமையாகவும், கவனமாகவும் விடயங்களைக் கையாளக் கூடியவர். அத்துடன் தனது அனுபவங்களைக் கொண்டு இளம் ஆசிரியர்களை நெறிப்படுத்தியவர்.

இருபத்தொன்பது ஆண்டுகள் கிளிநொச்சி கல்வி வலயத்தில் பணியாற்றி எமது மாவட்ட கல்வி அபிவிருத்திக்கு அடித்தளமாக இருந்த மணிவிழா நாயகி சிறந்த ஆசிரியராக, பிரதி அதிபராக பல்வேறு வகிபாகங்களுடன் அன்னையாய், ஆசானாய், செவிலியாய், நண்பியாய் ஒளி தந்து சேவையாற்றி இன்று அகவை அறுபது காணும் நன்னாளில் செல்வ கலை அருவிக்காக வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமகிழ்கின்றேன்.

இன்று போல் என்றும் ஆரோக்கியமாகவும் மகிழ்வாகவும் குடும்பத்தாருடன் வாழ இறைஆசி வேண்டி நிற்கின்றேன்.

**பா.வாசுதேவன்,**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர் (பொது நிர்வாகம்),**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**கிளிநொச்சி தெற்கு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரைச்சிக் கோட்டக்கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

மணிவிழா நாயகி செல்வராசா கலையரசியை நூற்றாண்டு காலம் வாழ்கவென அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

புங்குடுதீவு மண்ணிலே பிறந்து வளர்ந்து மழலைமொழி பேசி அப் பகுதியில் கல்வி கற்று கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்கலவன் பள்ளியிலே முதல் நியமனம் பெற்று கிளிநொச்சி மத்திய ஆரம்பப் பள்ளியிலே சேவையை முடிவுறுத்தி இன்று மணிவிழாக் காணும் நாயகி பதித்த தடச் சுவடுகள் ஏராளம் ஏராளம்.

வீட்டிலே அன்புப் பிள்ளையாக, குடும்பத்திலே மனைவியாகப் பிள்ளைகளுக்கு தாயாக, நல்லவளாக, பண்பானவளாக, முகமலர்ச்சியான சிறந்த நிர்வாகியாக, விருந்தோம்பல் பண்புகளுடன் இல்லாளாக பள்ளியிலே ஆசிரியராக எனப் பல வகிபாகங்களுடன் மணிவிழாக் காணும் கலையரசியின் எதிர்காலம் அமைதியாகவும் இறை பக்தியுடனும் உற்றார், உறவினர் அரவணைப்புடனும் திகழ வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

“இரவு கண்டது கனவு” என்பது விடிந்ததும் தெரியும். அதே போல் வாழ்ந்து முடிந்ததும், தான் எவ்வாறு வாழவேண்டும் என்பது புரியும். வாழ்க்கை அனுபவங்களை விட்டுச் செல்லாமல் அன்பை விட்டுச் செல்லும் மணிவிழா நாயகியின் நினைவுகள் இப் பள்ளியிலே தங்கியிருக்கும்.

நிலைமை மாறினால் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்பது பொய். மகிழ்ச்சியாக இருந்தாலே நிலைமை மாறிவிடும் என்பதே உண்மை. மகிழ்ச்சியாக எதிர்காலம் அமைய வாழ்த்தி நிற்கின்றேன்.

சு. தர்மரத்தினம் JP,
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கரைச்சி, கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கல்வித் தாயின் குடும்பத்திலே அவதரித்து தனது பிறந்த ஊரிலேயே ஆரம்பக் கல்வியைப் பயின்று யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த பாடசாலைகளில் ஒன்றாகிய வேம்படி மகளிர் கல்லூரியில் இடைநிலை, உயர் கல்வியைக் கற்றுத் தேர்ந்து தனது தாய் தந்தையாரின் வழியில் நல்லாசிரியராய், பிரதி அதிபராய் சேவையாற்றிய எங்கள் திருமதி கலையரசி செல்வராசா ஆசிரியையை மணிவிழா நாளில் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தனது ஓய்வுக் காலத்திலே பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் மனநிறைவுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.அ.ரவீந்திரன்,**
**உதவிக்கல்விப்பணிப்பாளர் (ஆ.க),**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**கிளிநொச்சி தெற்கு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Heartfelt Congratulations

As per the Kural at great Thiruvalluvar which is "If you are born, be born with qualities conductive to fame", Mrs Kalaiyarasi Selvarajah has worked as a teacher and retires at the age of sixty.

Teaching kids is not an easy task that anyone can do but Mrs Kalaiyarasi Selvarajah made it effective as a primary teacher not only educated the subject, but also taught discipline and built a strong foundation for the future life of the children.

She dedicated herself to educate and improve English as a subject, and also as a language in various ways such as stage performances. As a result she made students to participate in divisional level, and zonal level English day competitions which made her as an important asset of KN/Kilinochchi Central Primary Vidyalam.

I admire her service in KN/Ramanathapuram East G.T.M.School and KN/Ramanathapuram M.V during the difficult situation when there was an internal war in Sri Lanka.

Also it is important to remember Late Mr. K.Selvajah, her husband, for the support throughout her successful career. I throughly appreciate the effort she put into this profession and wishing her for a peaceful, long and healthy life after her retirement.

**K.Balaganeshan,**
**ISA - English,**
**Zonal Education Office,**
**Kilinochchi - South.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

மானிட மேம்பாட்டுப் பணியில் சிறப்பானதும் உன்னதமானதுமான பணி ஆசிரியப் பணியாகும். இப் பணியில் இணைந்து அளப்பரிய சேவையாற்றி மணிவிழாக் காணும் திருமதி கலையரசி செல்வராசா ஆசிரியர் அவர்கள் தனது ஓய்வுக் காலம் சிறக்க உடல், உள ஆரோக்கியத்துடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

ஆசிரியருடைய சிறந்த ஆளுமையும் ஆசிரியத்துக்கே உரிய தோற்றப் பொலிவும் மாணவர்களை வசீகரிக்கும் முகபாவனையும் கொண்டு கண்டிப்புடன் கூடிய அன்பையும் பகிர்ந்து ஆங்கிலக் கல்வியை இரசனையுடன் ஊட்டிய பெருமைக்குரியவர்.

கல்விப்பணியில் இருபத்தொன்பது வருடகாலம் சேவையாற்றிய துடன் இச் சேவை சிறக்க இல்லறத்திலும் நல்ல இல்லத்தரசியாக மிளிர்ந்து இந்தத் தேசத்தின் அபிவிருத்தியுடன் பங்கெடுக்கக் கூடிய நல்ல பிள்ளைகளையும் குடும்பத்தினூடாக உருவாக்கியதோடு குடும்பம், வேலைத்தளம் இரண்டையும் சிறப்பாக முகாமை செய்து வழிநடத்தி சமூகத்தின் நல்ல வழிகாட்டியாகவும் திகழ்ந்துள்ளார்.

ஆங்கிலக் கல்வியின் தேவை உணர்ந்து ஆரம்பக் கல்வி மாணவர்களுக்குக் கலைத்திட்ட நடைமுறைகளுக்கு ஏற்ப கற்றல் திட்டங்களை வகுத்து முறையான கற்பித்தலை வழங்கியதுடன் வகுப்பறையில் மாணவர்களுக்கான கற்றலுக்கேற்ற சூழலை உருவாக்கி ஆங்கிலக் கல்வியின் அடித்தளத்தை அடிப்படையில் வழங்கக் கூடிய மதிநுட்பத்தையும் தன்னகத்தே கொண்டு செயலாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் நிர்வாகப் பணியில் தன்னலம் பாராது செயற்பாடு களைப் பொறுப்பேற்பதுடன் அவற்றின் பணி சிறக்க முன்னின்று செயற்படுவதிலும் வல்லவர். கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய முதல்வர்களுடன் சேர்ந்து பணியாற்றி நிர்வாகச் செயற்பாடுகளை முன்னின்று செயற்படுத்தியதுடன் பாடசாலையின் சிறப்பான விளை திறனுக்கும் காரணமாகத் திகழ்ந்தார்.

ஆசிரியப் பணியில் ஏனைய ஆசிரியர்களுடன் அன்பாக, பண்பாக, நேயஉணர்வுடன் பழகியதுடன் முன்மாதிரியான ஆளுமை வெளிப்பாடு களையும் காண்பித்ததுடன் அளவாகப் பழகும் பண்பையும், பேசும் பக்குவத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

தனது சேவைக் காலத்தில் பல கல்விமான்களையும், தேசப்பற்றாளர் களையும், சமூகசேவையாளர்களையும் உருவாக்கி இந்த நாட்டின் அபிவிருத்தியில் கைகோர்க்கக் கூடிய வல்லுநர்களையும் உருவாக்கிய பெருமைக்குரிய ஆசிரியருடைய பணி மென்மேலும் சிறக்கவும் நீண்ட ஆயுளைப் பெற்று சுகதேகியாக வாழவும் வாழ்த்துகின்றேன்.

**திரு.பா.ஸ்ரீஸ்குமார்,**
**சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக்கல்வி),**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**கிளிநொச்சி தெற்கு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா நாயகியை மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல பாடசாலைகளில் இருபத்தொன்பது ஆண்டுகள் கல்விப் பணியாற்றி இன்று கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் பணிநிறைவு பெற்று மணிவிழாக்காணும் மணிவிழா நாயகி திருமதி கலையரசி செல்வராசா அவர்களை வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன்.

யாழ்ப்பாணம் புங்குடுதீவில் கல்விப்பணியாற்றிப் புகழ் பெற்ற தியாகராசா தங்கம்மா தம்பதியினரின் மூத்த புதல்வியாகப் பிறந்த இவர் பெற்றோரது ஆசிரியப் பணியினைத் தொடர்ந்து தானும் ஆற்ற வேண்டுமென்ற பெரு விருப்புடன் ஆசிரியப் பணியினை ஆரம்பித்தவர். மாணவர்களுக்கு மட்டுமன்றி தனது இளைய சகோதரர்களுக்கும் முன்மாதிரியாக நடந்து அவர்களையும் உயர்வுபெறச் செய்தவர். இவரது கல்விப்பணி அர்ப்பணிப்புக்களை நான் சிறியவனாக இருந்த காலந்தொட்டு இன்றுவரை நேரடியாகப் பார்த்தவன் என்ற வகையில் மணிவிழா வாழ்த்துத் தெரிவிப்பதை பெருங்கொடையாகப் பார்க்கின்றேன். ஒரு மனிதனுடைய வாழ்க்கைக்கு அடித்தளமிடுகின்ற ஆரம்பக் கல்வியை மிக விருப்போடும், அர்ப்பணிப்போடும் ஆற்றிய இவர் ஆரம்பக் கல்வி மாணவர்களது அடிப்படை ஆங்கில அறிவைப் புகட்டுவதில் ஆர்வத்துடன் செயற்பட்டவர். இவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் “கலா ரீச்சர்” என்று செல்லமாக அழைக்கும் அளவிற்கு அன்பும், அரவணைப்பும், ஒழுக்கமும் காட்டி அவர்களது மனதை விட்டகலாதவாறு கற்பித்தலில் ஈடுபட்டவர்.

கற்பித்தல் பணியில் மட்டுமன்றி பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து பணியாற்றும் ஆளுமை மிக்கவர். பாடசாலை மட்டக் குழுக்களுடன் இசைந்து பணியாற்றும் வல்லமை மிக்கவர். பொறுப்புக்களை விருப்புடன் ஏற்றுச் செயற்படுத்துகின்ற செயலாற்றுகை பொருந்திய இவர் பாடசாலைக் கணக்குகளைக்கூட மிக நேர்த்தியாக செயற்படுத்தியமையை நான் கண்டிருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்டத்தில் இவரிடம் ஆரம்பக் கல்வி கற்ற மாணவர்கள் பலர் இன்று பல உயர் பதவிகளை அலங்கரிப்பதனைக் கண்கூடாகக் காணக்கூடியதாகவுள்ளது. பிறர் பிள்ளைகளை தன் பிள்ளை போல் கருதிப் பணியாற்றிய இவரது தூய உள்ளத்தின் சான்றாக அவர் பெற்றெடுத்த நான்கு பிள்ளைகளும் நான்கு துறைகளில் பட்டதாரிகளாகி மிளிர்கின்றனர்.

ஆரம்பக் கல்வித்துறையில் ஆசிரியப் பணியினை கிளி/இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பித்த இவர் தொடர்ந்து கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் சிறப்பாகப் பணியாற்றி இறுதியாக கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் பணியாற்றி பணியிலிருந்து விடைபெறுகின்றார். மிக இக்கட்டான பொருளாதாரத்தடை, போர்ச்சூழல் மத்தியிலும் சிறப்பாகப் பணியாற்றிய இவர் தனது உற்ற உறவுகளைப் பிரிந்த நிலையிலும் மனச்சுமையைத் தாங்கியபடி சமூகப்பணியாம் கல்விப் பணியினைச் செவ்வனே செய்து முடித்த அந்தத் தருணங்களை எண்ணிப் பார்க்கின்றேன்.

இவரது பணிக்குத் துணையாக இருந்த கணவர் அமரர் கோ.செல்வராசா அவர்களும் கல்வித்துறையில் பல்வேறு பணி நிலைகளில் பணியாற்றி இறுதியாக பிரதிக் கல்விப் பணிப் பணிப்பாளராக எம்மையெல்லாம் சிறப்பாக வழிநடத்திய நினைவுகள் இன்றும் மனதில் நிழலாடுகின்றது. "ஆள் ஆற்ற முடியாத துயரங்களை நாள் ஆற்றும்" என்பது போல என்ன துன்பங்கள் வந்த போதும் நீண்ட கல்விப் பணியைச் சிறப்பாக ஆற்றிய இவரது மனோதிடம் பாராட்டுதற்குரியது.

இவர் ஓய்வுக்காலத்தில் உடல், உள ஆரோக்கியத்தோடும் மன நிறைவோடும் வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு தி.சிவரூபன்,**
**ஆசிரிய ஆலோசகர் (வர்த்தகம்),**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**கிளிநொச்சி தெற்கு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா வாழ்த்து
# திருமதி. கலையரசி செல்வராசா அவர்கள்

29 ஆண்டுகள் எமது மாவட்டத்தில் கல்வித்துறைக்கு பெரும் பங்காற்றி பல நூறு மாணவர்களை ஏணியாய் இருத்தி உயர்த்திய பெருமைக்குரியவர். தனித்துவம் மிக்க ஆளுமையுடன் ஆரம்பக் கல்வியில் தனக்கென முத்திரை பதித்தவர். அது மட்டுமன்றி ஆரம்பக் கல்வி ஆங்கில ஆசிரியராக கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் ஆங்கிலப் போட்டிகளுக்கு மாணவர்களை பயிற்றுவித்து கோட்ட, வலய, மாகாண ரீதியாக பல வெற்றிகளை பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்ததுடன் மாணவர்களை ஆங்கிலப் புலமை மிக்கவர்களாக மாற்றி மாணவர்கள் மனதில் இடம் பிடித்து அவர்களின் மனங்களில் வாழ்கின்றார்.

பாடசாலை நிர்வாகக் கடமைகளை உரிய காலத்தில் நேர்த்தியாக நிறைவேற்றுவதில் அக்கறையுடன் செயற்பட்டு ஆசிரியர்களுடன் முரன்பாடுகள் இன்றி தனது செயற்பாடுகளை திறம்பட செய்து முடிப்பதில் வல்லமை உடையவராகி செயற்பட்டவர். வாழ்வில் பல நெருக்கடிகள் ஏற்பட்ட போதும் தனது கல்விப் பணியை இடை விடாது வெற்றி கண்டவர்.

எமது மாவட்டத்தின் பிள்ளைகளை உயர் நிலைக்கு உயர்த்தியதுடன், தனது பிள்ளைகள் அனைவரையும் சிறந்த நிலைக்கு கொண்டு வந்து அன்னை என்ற பொறுப்பை சரிவர நிறைவேற்றினார்.

தன்னடக்கமும், தனியாளுமையும் கொண்டு எமது மாவட்டத்திற்கு அளப்பரிய கல்விப் பணியாற்றி ஓய்வு பெறும் திருமதி கலையரசி செல்வராசா அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்பதோடு சிறந்த உடல், உள ஆரோக்கியமும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.ப.சசிரதன்,**
**செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**கிளிநொச்சி தெற்கு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஞ்சு புகழ் வித்தகியே வாழ்க!

சிட்டுக்களுடன் சிங்காரமாய் கதை பேசி
சிந்தனை ஆற்றலை சிறகடிக்கச் செய்யும்
எந்தன் மனம் கவர்ந்த ஆசிரியர்களுள்
கலையரசி செல்வராசா தனி முத்திரை பதித்தவர்
சின்னவர் யாவரும் மன்னவராகி
அன்னமெனத் திறனாய்ந்து வளர
மொழியாற்றலை வளர்ப்பதில் திறமைசாலி!
ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்ற
ஆரம்பக் கல்வியின் ஆணிவேர்
உடலுடன் உள்ளமும் செழித்திட
பிஞ்சுகளின் நெஞ்சில் உயிரோட்டமாய் நின்றதால்
விஞ்சுபுகழ் வித்தகியாய்
கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில்
மலரும் மொட்டுக்களுடன் பணியாற்றியவர்
ஆங்கிலத்தில் குழுப்பாடல் போட்டி 2017 இல்
கோட்டத்தில் 1ஆம் இடம், வலயத்தில் 1ஆம் இடம்
மாகாணத்தில் 2ஆம் இடம் பெற்று
வெற்றிச் சாதனை படைக்க
பயிற்சியளித்து ஊக்கமும் கொடுத்து
கற்பித்தலில் சாதனை படைத்தார்
தேர்ச்சி பெற்ற மாணவர் பரம்பரை
தங்கள் பெயர் சொல்லும்
அன்புடன் சிறார்களைப் போட்டிக்கு
அழைத்துச் சென்று மகிழ்வூட்டி பெருமைப்படுத்திய ஆசான்

அன்பும் அரவணைப்பும் முகமலர்ச்சியும் ஒருங்கே இணைந்த மாதருள் மாணிக்கம் கலையரசியின் கல்விப் பணியினையும் தடம் பதித்த செயற்பாட்டையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

சேவை சிறக்க எனது நல்லாசிகள்

**திருமதி கா.சிவகரன்,**
**அதிபர் – கிளி/உருத்திரபுரம் ம.வி,**
**முன்னைநாள் அதிபர் – கிளி/கிளிநொச்சி ம.ஆ.வி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Appreciation of service

This is great pleasure to appreciate Mrs Kalaiyarasy Selvarajah for her invaluable service to the children of Kilinochchi Central Primary Vidyalayam. As I had observed her classes many times. I was able to see her wonderful teaching skills. In addition to that she has shown her talent in preparing students for english language competitions resulting many places not only at divisional levels but also at provincial levels.

I heartily express my appreciation because she had been very dedicated, enthusiastic, creative and motivational teacher for primary pacage. I wish her a bright prosperous and happy retirement.

**B.Sivagnanam,**
**Ex. ISA (English),**
**Kilinochchi Zone.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதலாவது அதிபரின்
# வாழ்த்துச் செய்தி

01.09.1992 இல் ஆங்கில பாட ஆசிரியராக முதல் நியமனம் பெற்று கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலையில் கடமையேற்ற திருமதி கலையரசி செல்வராசா அவர்கள் தனது கற்பித்தல் செயற்பாடுகளையும் ஏனைய இணைபாட விதான செயற்பாடுகளையும் செவ்வனே நிறைவேற்றியவர்.

ஏனைய ஆசிரியர்களுடன் இணைந்து ஒற்றுமையாக தன் பணியை செய்ததுடன் மாணவர்களின் நல்லொழுக்கம், விழுமியம், ஆளுமைமைப் பண்பு போற்றவற்றையும் விருத்தி செய்வதில் முன்னின்று உழைத்தவர். யுத்தகாலத்தில் பல்வேறு இடர்கள் ஏற்பட்ட போதும் பாடசாலையை நிர்வகிப்பதில் பூரண ஒத்துழைப்பை வழங்கிய திருமதி கலையரசி செல்வராசா அவர்கள் ஓய்வுநிலைக் காலத்திலும் உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ நந்தவனப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றேன்.

**வை.தனிநாயகம்,**
**ஓய்வு நிலை அதிபர்,**
**கிளி/இராமநாதபுரம் ம.வி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

மணி விழாக்காணும் திருமதி கலையரசி செல்வராசா அவர்களின் சேவைப் பதிவு ஏட்டிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகிறேன். யாழ், புங்குடுதீவில் பிறந்து ஆரம்பக்கல்வியை புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்திலும், உயர் கல்வியை யா/வேம்படி மகளிர் கல்லூரியிலும் கற்று பின்னர் இராமநாதபுரத்தில் குடியேறி தனது ஆசிரியர் பணியை முதன் முதலில் கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலையில் ஆரம்பித்தார். இவருடைய பணிக்காலத்தில் 1999ஆம் ஆண்டு இப்பாடசாலையில் நான் அதிபராக பொறுப்பேற்றேன். அக்காலத்தில் ஆசிரியரின் சேவையானது பாடசாலையின் வளர்ச்சிப் போக்கில் பெரும் பங்காற்றியது. எந்த நேரத்திலும் ஒரே இயல்பை பேணும் தன்மை என்பது இவரின் சிறப்புக்களில் ஒன்றாகும். சக ஆசிரியர்களோடு நட்போடும், அன்போடும் உறவாடி ஒரே குடும்பம் என்ற அந்த மகத்துவத்தை கிழக்கில் உருவாக்கிய ஒரு பெருந்தகை. அக்காலத்தில் ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக்குறை நிலவிய போது ஆரம்பக் கல்வியோடு மாலை நேரத்தில் ஆங்கில பாட ஆசிரியராகவும் தனது சேவையை வழங்கியமை சிறப்பானது.

2002ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் கணினி என்ற சொல் மட்டுமே பலருக்கு தெரிந்திருக்கும். இவ் வேளையில் திரு.மகேசன் கந்தையா (Australia) அவர்களின் ஏற்பாட்டில் ஆங்கில விருத்திச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. அதன் இணைப்பாளராக இருந்து மாணவர்களுக்கு கணினி அறிவையும் ஆங்கில மொழி விருத்தியையும் மேம்படச் செய்வதில் பெரும் பங்காற்றியுள்ளார்.

ஒவ்வொரு பிள்ளையையும் தன் பிள்ளை போன்று அன்போடு அரவணைக்கும் பண்புள்ளவர். இதற்கு ஒரு சிறு சான்று 2002ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய கோட்டக்கல்விப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு சி.சிற்றம்பலம் அவர்கள் பாடசாலைக்கு வருகை தந்து வகுப்பறைக்கு சென்ற போது நானும் அவருடன் சென்றேன். தரம் 02 வகுப்பறையில் மாணவர்களோடு அவர் மகிழ்ச்சியாகவே இருந்தார். மாணவன் ஒருவர் அவருடைய கைகளில் தொங்கியதை பார்த்து என்னிடம் கேட்டார். “அவருடைய மகனா?” என்று “இல்லை அவருடைய வகுப்பில் உள்ள பிள்ளை அனைவரும் அவருடைய பிள்ளைகள்” என்றேன். இந்த நிகழ்வு கோட்டக்கல்விப் பணிப்பாளரின் மனதை தொட்டது. அவர் பாடசாலைக்கு வருகின்ற நாள் ஆசிரியரின் வகுப்பிற்கு செல்வது வழமையாகவே இருந்தது.

இவ்வாறு தனது சேவையில் 1992 - 2007 வரையான காலப்பகுதியில் பணியாற்றிய ஆசிரியரின் பண்பாடும் கல்விவிருத்தி செயற்பாடுகளும் அளவிட முடியாதது. தனது கல்விப்பணியில் 29ஆண்டுகளில் பூர்த்தி செய்து தனது ஆசிரியப்பணியில் இருந்து சட்ட பூர்வமாக ஓய்வு பெற்றாலும் எமது பகுதி சிறார்களுக்கும் தற்போதைய பாடசாலையான கிளி/மத்திய ஆரம்ப வித்தியாலய சமூகத்திற்கும் நற்பணியாற்ற இறைவனின் நல் ஆசிகள் கிடைக்க வேண்டிக்கொள்வதோடு ஓய்வுகாலம் சிறப்புடன் மலர எனது வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன்.

**திரு.ச.புண்ணியமூர்த்தி,**
**அதிபர்,**
**கிளி/இராமநாதபுரம் ம.வி,**
**இராமநாதபுரம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாண்புடன் மணிவிழாக் காணும் நாயகிக்கு ஆழ்மனதின் நன்றி கலந்த வாழ்த்துக்கள்

இவ்வுலகில் உயர்வான பணியாம் கல்விப் பணியில் தன்னை இணைத்துக் கொண்டு மணிவிழாக் காணும் திருமதி செல்வராசா கலையரசி அவர்களுக்கு வாழ்த்து வழங்குவதில் இச் சிறியோனாகிய நான் பேருவகை அடைகின்றேன்.

தன்னலம் கருதாது எந்த நேரமும் சிறார்களின் கல்விச் சிந்தனையோடு பணியாற்றிக் கல்வியில், கலையில், ஒழுக்கத்தில் உயர்ந்த மாணாக்கர்களை உருவாக்கிய பெருமைக்குரிய நாயகி.

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் 11 ஆண்டுகள் ஆசிரியராய், பிரதி அதிபராய் அர்ப்பணிப்பான பணியை ஆற்றி பெரும் மனத் திருப்தியோடு இன்று மணிவிழாக் காணும் நாயகியை எமது பெற்றோர், மாணவர், நலன் விரும்பிகள் சார்பாக மனம் மகிழ்ந்து வாழ்க வென்று வாழ்த்துகின்றேன்.

**பிரசாத்நாயகம் மார்ஷல்,**
**செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்தி சபை,**
**கிளி/கிளிநொச்சி ம.ஆ.வி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி. கலையரசி செல்வராசா அவர்களின் வாழ்வியல் தடம் - ஒரு பார்வை

ஈழத்தின் வடமாகாணத்தின் தென்பால் அமைந்துள்ள சப்த தீவுகளில் ஒன்று புங்குடுதீவு எனும் புங்கையூர். பொன்கொடு தீவு என அழைக்கப்படும் சிவ புண்ணிய பூமி. பெருமை வாய்ந்த இப் பதியிலே மணிவிழா நாயகியான திருமதி. கலையரசி செல்வராசா அவர்கள் குடும்பத்தில் மூத்த புதல்வியாக 1962.01.01 இல் பிறந்தார். புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட தியாகராசா (முன்னாள் உப முதல்வர் - யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்) அவர்கள் அன்பான தந்தையாகவும் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட தங்கம்மா (முன்னாள் அதிபர் - இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா) அவர்கள் கண்டிப்பான இனிமையான தாயாகவும் மணிவிழா நாயகியை ஆரம்பக் கல்வி கற்க யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்திற்கும், இடைநிலைக் கல்வி, உயர்கல்வி ஆகியவற்றைக் கற்க யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலைக்கும் அனுப்பி வைத்தனர். முறையான கல்வியைப் பெற்று க.பொ.த உயர் தரத்தில் சிறந்த பெறுபேற்றையும் பெற்றார்.

மணப்பருவத்தை அடைந்த மணிவிழா நாயகியை எமது கிளிநொச்சி கல்வி வலயத்தின் முகாமைத்துவப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக பணி புரிந்த கிளிநொச்சி இராமநாதபுரத்தை வதிடமாகக் கொண்ட திருவாளர் கோவிந்தசாமி செல்வராசா அவர்களைக் கரம் பிடித்து "நன்கலம் நன்மக்கட்பேறு" என்பதற்கேற்ப பிள்ளைச் செல்வங்களாக க.தர்ஷிகா BA (அபிவிருத்தி உத்தியோகத்தர்), செ.கிருஷிகன் B.D.S (பல் மருத்துவர்), செ.தஜிவன் B.Sc(Eng) (பொறியியலாளர்), து.ஹோபிகா B.Sc (ஆசிரியர்) ஆகியோரைப் பெற்றெடுத்தார்.

1992.09.01 இல் ஆங்கிலபாட ஆசிரியராக கலையரசி செல்வராசா அவர்கள் திரு.வை.தனிநாயகம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய போது கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பாடசாலையிலேயே முதல் நியமனத்தைப் பெற்றார். நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக 1998 - 1999 காலப்பகுதியில் நு/அரசினர் ஆசிரியர் கலாசாலை, யதன்சைட், கொட்டகலையில் ஆரம்பக்கல்வி ஆசிரியராகப் பயிற்றப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின் 2004 - 2006 காலப்பகுதியில் தேசிய கல்வி நிறுவகத்தில் கல்விமாணிப்பட்டக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்து டிப்ளோமாவுடன் கூடிய (B.Ed) பட்டதாரியானார். மணிவிழா நாயகி தனது சேவைக்காலத்தில் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலையில் ஆரம்பக் கல்வி ஆங்கில ஆசிரியராகவும் பின்னர் ஆரம்பக் கல்வி ஆசிரியராக ஆரம்பக்கல்வி வகுப்புகளுக்கும் கல்வி கற்பித்தார். கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயத்திலும் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு ஆரம்பக்கல்வியும், ஆங்கிலமும் கற்பித்தார்.

2011 இல் கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் கடமையேற்ற காலம் தொடக்கம் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு ஆங்கில பாடத்தை மிகவும் தெளிவாகக் கசடறக் கற்பித்தார். அத்துடன் கடந்த பதினைந்து மாதங்களாக பாடசாலையில் பிரதி அதிபராகவும் பணியாற்றி யுள்ளார்.

2012 - 2019 வரையான காலப்பகுதியில் எமது வித்தியாலயத்தில் மாணவர்கள் ஆங்கில தினப் போட்டிகளில் குழுப்பாடல் நிகழ்வில் கோட்ட, வலய, மாகாண மட்டங்களில் வெற்றியீட்டிப் பாடசாலைக்குப் பெருமை சேர்ப்பதற்குப் பயிற்றுவித்த ஆசிரியர் மணிவிழா நாயகி திருமதி கலையரசி செல்வராசா அவர்களே. மேலும் 2017 இல் இவரால் பயிற்றுவிக்கப்பட்ட ஆங்கிலக் குழுப்பாடல் மாகாண மட்டத்தில் 2ஆம் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

2016 இல் ஆங்கில தினப் போட்டியில் தனிநிகழ்வுகளில் மாணவரை தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றச் செய்தமை பெருமைக்குரிய விடயமாகும்.

இவர் 2002 - 2004 காலப்பகுதியில் (GTZ) இனால் நடாத்தப்பெற்ற போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வித்தர மேம்பாட்டிற்கான செயலமர்வுகளில் வளவாளராகச் செயற்பட்டுள்ளார். கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பாடசாலையில் சேவையாற்றிய காலத்தில் அவுஸ்திரேலியா அணியினரின் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான ஆங்கில மொழிவிருத்தி செயற்றிட்டத்தில் (PIMD) இணைக்கப்பட்டார். 2011 - 2012 காலப்பகுதியில் இச் செயற்றிட்டத்தில் ஆசிரியர்களுக்கான வளவாளராக பணியாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவிழா நாயகி கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்க பொருளாளராகவும், பாடசாலை விளையாட்டுக்குழு பொருளாளராகவும், ஆசிரியர் நலன்புரிச் சங்க செயலாளராகவும் பணியாற்றினார்.

கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா 2019இல் நடைபெற்ற நாளில் மணிவிழாநாயகியின் கணவரான திருவாளர் கோ.செல்வராசா அவர்கள் திறப்பு விழா நிகழ்வில் கலந்து நிகழ்வை சிறப்பித்து விட்டு அன்று மாலையே வலயக்கல்வி அலுவலகத்திற்கு அருகில் நடைபெற்ற விபத்தில் சிக்கி இறைவனடி சேர்ந்த போது ஆறாத்துயரில் மூழ்கி இருந்தவர் தனது பிள்ளைகளின் நலனுக்காய் தமது பாடசாலைப் பணியைத் தொடர்ந்து செவ்வனே செய்து வந்தார்.

எமது வித்தயாலயத்தில் கலையருவியாகப் பாய்ந்து கொண்டிருந்த பிரதி முதல்வர் திருமதி கலையரசி செல்வராசா அவர்கள் 01.01.2022 இல் சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். தனது ஓய்வுக் காலத்தில் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், தாயார் மற்றும் உறவுகள், நண்பர்களுடன் நலமாக வாழ இறை அருள் வேண்டி நிற்கின்றோம்.

இவரது சேவையின் விபரம்

| சேவை நிலையம் | சேவை | இருந்து வரை | வழிகாட்டிய முதல்வர்கள் |
|---|---|---|---|
| கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை | ஆசிரியர் | 1992.09.01<br>1998.02.18 | திரு. வை.தனிநாயகம்<br>திருமதி. த.தியாகராசா |
| நு/அரசினர் ஆசிரியர் கலாசாலை - யதன்சைட், கொட்டகலை. | ஆசிரிய மாணவர் | 1998.02.19<br>1999.12.31 | திரு. த.கணபதி<br>திரு. சு.முரளிதரன்<br>திரு. ச.ஜெயக்குமார் |
| கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை | ஆசிரியர் | 2000.01.01<br>2007.12.31 | திரு ச.புண்ணியமூர்த்தி |
| கிளி/இராமநாதபுரம் ம.வி | ஆசிரியர் | 2008.01.01<br>2011.01.09 | திரு. க.முருகவேல் |
| கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம் | ஆங்கில ஆசிரியர்<br>பிரதி முதல்வர் | 2011.01.10<br>2021.12.31 | திருமதி. கா.சிவகரன்<br>திரு. சி.கேதீஸ்வரன் |

தொகுப்பு : திருமதி. ஜெயஸ்ரீ உதயகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம் மணிவிழா வாழ்த்து

திருமதி கலையரசி செல்வராசா

மங்கல நன் நாள் இன்று
மணிவிழா நாளும் இன்று
எங்களின் கலையரசி ஆசிரியை
இளைப்பாறும் நாளும் இன்று
திங்களின் ஒளியைப் போல
திசை எங்கும் ஒளியைக் கூட்டி
அங்கமாம் கரங்கள் குவித்து
அனைவரும் வாழ்த்துகின்றோம்.

மார்கழி மழைத் துளியில்
மலர்ந்த நற்பூக்கள் தேடி
ஆர்வமாய் மாலை ஆக்கி
அழகிய கவியும் சேர்த்து
ஊர் எல்லாம் திரும்பிப் பார்க்க
உயர் பதவியோர் பலரும் வாழ்த்த
மாலைகள் சூட்டி நாங்கள்
மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

ஆங்கிலப் புலமையிலே
அதிசயம் நீங்களம்மா
பாங்குடன் மாணவர்களுக்கு
பயிற்சிகள் கொடுத்தீரம்மா
தீங்கனி இதுவே யென்று
தித்திக்கப் படித்தோரெல்லாம்
ஆங்கில மொழியால் இன்று
வாழ்த்துக்கள் அனுப்புவார் வாழ்க! வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவிழா நாளில் இன்று
மத்திய ஆரம்ப வித்தியாலயம் - தங்களின்
பணிகளைப் பாடிப் பாடி
பல்லாண்டு வாழ்த்துத் தந்து
அகவையாம் அறுபதிலே
ஆயுளும் சிறக்கவென்று
நெறிமுறை நின்று தங்களை
நீடூழி வாழ்த்துகின்றோம்.

**ஆக்கம்**
**பூநகர் கவிப்பிரியா,**
**ஆசிரியை,**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகியை மனம் நிறைந்து வாழ்த்துகிறேன்

மணிவிழா தனில் மகுடம் சூடும்
மதிப்பிற்குரிய ஆசிரியர்,
தலைமைக்கு தலைவணங்கும்
தனித்துவமான ஆசிரியர் கலையரசி செல்வராசா

அன்பாகப் பேசுவார் அறிவோடு கதைப்பார்
புன்னகை தழுவும் சிரித்த முகம்
எதையும் முடியும் என்ற எண்ணத்துடன்
முழுமையாக சிறப்புடன் செய்து முடித்திடுவார்

ஆசிரியர் பணியில் அயராது உழைத்தவர்
ஆங்கிலத்தை ஆர்வத்துடன் கற்பித்தவர்
மாணவர் விருப்புடன் கற்பதற்காய்
விதம் விதமாய் கற்பித்தவர்

ஆசிரியரின் பணிகள் அளவிட முடியாது
எங்கள் பாடசாலை வளர்ச்சிக்காய்
நாள் முழுதும் பணியில் இருந்தவர்
காலமெல்லாம் வசந்தம் மலரட்டும்
இப் பொன்நாளில் வாழ்த்துகின்றேன்.

**அன்புடன் வாழ்த்தும்**
**திருமதி. சுஜாதா ரகுநாதன்,**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலம் வாழ எம் வாழ்த்துக்கள்

நிறை காணும் குணம் கண்டோம்
கறை காணா மனம் கண்டோம்
துறைசார் அறிவு கண்டோம்
தாயன்பால் மகிழ்ந்து நின்றோம்.

உற்சாக மருந்து உங்கள் வணக்கம்
உற்ற நண்பன் உங்கள் வார்த்தை
உறவுக்கு இலக்கணம் உங்கள் அருகு
மொத்தத்தில் எமக்கும் நீங்கள் ஆசான்

விளையாட்டு என்றால் குழந்தை
வகுப்பறை என்றால் பாடம்
ஆங்கிலம் என்றால் புலமை
எமக்கெல்லாம் என்றும் வழிகாட்டி

அகவை வளர்ந்து ஓய்வினைத் தந்து
பிரிக்க நினைத்து தோல்வியைக் கண்டு
விழிக்க வைத்தது எங்கள் நட்பு
என்றும் நீங்கள் எங்கள் வழிகாட்டி

இனிதின் பிறப்பாய் ஓய்வு அமைய
நலன்கள் கூடி வாழ்வு சிறக்க
மனங்கள் கூடி வாழ்த்துகின்றோம்.
வாழ்க வாழ்க என்றும் மகிழ்ந்து

**திரு.சு.பாலகுமாரன்,**
**ஆசிரியர்,**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்

அன்புக்கு இலக்கணமாய் அறிவுக்கு ஆழ்கடலாய்
ஆளுமைக்கு அதிபதியாய் பொறுமையின் பூதலமாய்
பூமியிலே வந்துதித்த புண்ணிய புதல்வரெல்லாம்
புன்னகையில் மனமகிழ்ந்து புதுமைகளைப் படைத்துயர
நித்தமும் சோராப்பணியால் நிறுவனம் பெருமை சேர
மலர்வனம் ஆனதம்மா ஆரம்பப் பள்ளிக் கூடம்

முளைவிடும் பயிர்கள் எல்லாம் மூழ்கிடும் மழலைகளாய்
முகமொன்று வாடாது மென்மையாகக் கற்பித்து
சளையாது பணியாற்றி சாதனைகள் பல புரிந்து
நிறுவன வளர்ச்சியிலும் அயராது பாடுபட்டு
அற்புத விளக்காக சுடர் விட்டு ஒளியூட்ட
பகல் விளக்கானதம்மா விந்தை மிகு கல்விக் கூடம்

காலத்தால் நலிவடைந்த சித்திரத் தேர்களெல்லாம்
பாதையிலே திசைமாறி தடம்புரண்டு உருண்டோட
அன்பாக அரவணைத்து கலைநயத்தால் கற்பித்து
சமூகத்து ஒளிவிளக்காய் தரணியிலே தவழவிட்ட
அற்புத தாயம்மா ஆனந்த ஜோதியம்மா

சுற்றத்தார் புடைசூழ சுந்தரியாய் வலம் வந்து
உடல் நலமும் உளநலமும் உன்வாழ்வில் மேலோங்க
நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றேன் வாழ்க வாழ்க

**வாழ்த்தும்**
**திருமதி. கு.தவராசா,**
**ஆசிரியர்,**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாண்புடன் மணிவிழா நாயகிக்கு...

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம் தன்னில்
நல்லாசிரியராய், பிரதி அதிபராய் பணிபுரிந்த
எங்கள் அறிவு மிக்க ஒளிவிளக்கே
பண்பிலே உயர்ந்தவராய்
பணியிலே கண்ணும் கருத்தும் நிறைந்தவராய்
உணர்வுகளால் எல்லோருக்கும் பிடித்தவராய்
மௌனப் புன்னகையால் எல்லோரையும் வசீகரிப்பவராய்
ஓய்வு நிலைக் காலத்திலும் ஓயாது பணி செய்து
மணிவிழாக் காணும் மாண்புமிகு நாயகியே
கலையரசி செல்வராசா என்றும்
வளமுடன் வாழ்க வாழ்கவென
வாழ்த்துகின்றேன் பல்லாண்டு பல்லாண்டு

**திருமதி. சி.கனகசுந்தரம்,**
**ஆசிரியை,**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக் கல்வி ஆங்கில ஆசான்...

கண்ணின் இமை போல - ஆசிரிய சேவை தனை
கட்டிக் காத்த செல்வ மகளே
அமைதியின் பிறப்பிடம் நீங்கள்
ஆளுமையின் வதிவிடம் நீங்கள்
பொறுமையின் சிகரம் நீங்கள்
அமைதிப்படுத்துவதில் ஆண்டவன் நீங்கள்
கற்பித்தலில் சிறந்தவள் நீங்கள்
உபசரிப்பதில் கற்பக தரு நீங்கள்
வார்த்தையில் நாவடக்கம்
வாழ்நாளில் கடைப்பிடித்தவர் நீங்கள்
வாழும் காலமெல்லாம் நினைத்திட
வழி சொல்லித் தந்தவர் நீங்கள்
பாடசாலைக் காலமதில் பணியதில்
விடைபெறும் நேரமதில்
வீட்டிற்கு அனுப்பிட மனமின்றி
விடை கொடுக்கின்றோம்
மீதிக் காலமதை
மன அமைதியோடும்
அன்போடும் களித்திட
ஆரம்பக் கல்வி ஆங்கில ஆசான் உங்களுக்கு
இறையாசி வேண்டுகின்றேன்.

**திருமதி. F.F.பரீஹா,**
**ஆசிரியை,**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட நாளில் இருந்து மணி விழா நாயகி...

அன்பின் சின்னமாய்
பொறுமையின் சிகரமாய்
வித்தியாலயத்தில் வலம் வந்த
வித்தை நாயகி எம் கலையரசி அம்மா

ஆங்கில மொழி தனை
அணுவளவும் குறையாது
அம்சமாய்ப் போதித்த
அன்பு அன்னை அவர்

கலையரசி எனும் கலை அம்சத்தை
ஆங்கில தினமதில் அலங்காரக் கோலத்தில்
பள்ளிச் சிட்டுக்களைத் துலக்கி
வெற்றி கண்ட பெரு நங்கை

மங்காத ஒளியாக பள்ளிக் குடும்பமதில்
கலைத் திறன் போட்டி உடல் திறன் போட்டிகளில்
நடுவு நிலைமையுடன் தீர்ப்பளிக்கும்
எம் மூத்த நீதிபதியுமவர்

கண்ணிமைக்கும் பொழுதில்
காலங்கள் உருண்டோடி
மணிவிழாக் காணும் மாண்புறு நாயகியை
போற்றி வாழ்த்த வரிகள் போதவில்லை

இவரது எண்ணங்கள்
பலரது மனங்களிலும்
நீங்காது இடம் பிடிக்கும்
இவரது பாங்கான குணத்தாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி விழாக் காணும் - எம்
மங்கள நாயகியாம் கலையரசி அம்மா
சீரும் சிறப்பும் பெற்று
சுற்றத்தாரோடு கூடி அக மகிழ்ந்து வாழ
கனகாம்பிகை அம்பாளின்
கமலமலர்ப் பாதங்களை
எந்நாளும் வேண்டுகின்றோம்.

**வாழ்த்தி வணங்குகின்றேன்**
**என்றும் உங்கள் அன்பான தங்கை**
**திருமதி. இ.அனுசியா,**
**ஆசிரியர்,**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆருயிர்த் தோழி

ஆங்கில ஆசிரியராகக் கல்லூரியில் வலம் வந்த உங்கள் கல்விப்பணி அளப்பரியது. 2011ஆம் ஆண்டு கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் காலடி பதித்த என்னை அன்புடன் அரவணைத்த பண்பின் வடிவமே என்றும் உமை மறவேன். எனது பணிப்பாதையில் நீங்கள் ஓர் கலங்கரை விளக்கு உங்கள் பணி எமது பாடசாலையில் சொல்லில் அடங்கா. அன் பின் உறைவிடமாகவும் அமைதியின் பிறப்பிடமாகவும் உள்ள உங்கள் சேவையைப் பாராட்டுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

பாடசாலைக் காலங்களில் உங்கள் திருவதனத்தில் ஒரு போதும் கோபத்தைப் பார்த்ததே இல்லை. எமக்கெல்லாம் முன்னோடியாக வழிகாட்டி எம்மை வளப்படுத்திய சிகரமே உங்கள் சேவை பாராட்டிற்குரியது. ஆங்கில ஆசிரியராக எமது பாடசாலைக்கு நீங்கள் ஈட்டிக் கொடுத்த வெற்றிகள் பல. கோட்ட மட்ட, வலய மட்ட, மாகாண மட்ட ஆங்கில தினப் போட்டிகளில் படைத்த சாதனைகள் அதற்கு சான்று பகர்கின்றன.

அத்துடன் இணைபாட விதான செயற்பாடுகளில் எம்மோடு தோளோடு தோள் கொடுத்த உங்கள் பணி சிறப்பானது. அது மட்டுமல்ல விளையாட்டுக்குழு பொருளாளர், பதிவாளர் ஆகிய பணிகளைத் திறம்படச் செய்த சிறப்பும் பெருமையும் உங்களுக்கானது. அதுமட்டுமன்றி பாடசாலை அபிவிருத்திக் குழுவில் ஆற்றிய பணிக்கும் பாராட்டுகள். விரைவு கணிதப் போட்டியில் மாணவர்கள் கோட்ட, வலய, மாகாண மட்டங்களில் வெற்றி பெறச் செய்து எமது பாடசாலையின் பெயரை நிலை நிறுத்துவதற்கு நிறைவான ஒத்துழைப்பு வழங்கியமை பாராட்டுக்குரியது. அத்தோடு தரம் 05 புலமைப் பரிசில் மாணவர்களுக்கு ஆங்கில பாடத்தைக் கற்பித்து சிறப்பித்துள்ளார்.

ஆசிரியரின் பணிக்கு கிடைத்த ஆரமாக பிரதி அதிபர் பணி கிடைத்தது. அப் பணி மாண்புற அமைந்தமைக்கு பல்வேறு விடயங்கள் சான்று பகர்கின்றன. அழகான கையெழுத்து. அனைவரும் ஓடி வந்து அன்புடன் விண்ணப்பப் படிவங்களை நீட்டும் போது சலிக்காது அலுவலக வேலைகளைச் செய்யும் பண்பு உயரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் சுமக்க முடியாத சுமைகள் இருந்த போதும், பாடசாலைக்கு வந்து விட்டால் பாடசாலைச் செயற்பாட்டில் தாங்கள் செய்யும் கடமைகள் களங்கம் இல்லாதவை.

மேலும் தாங்கள் தங்கள் குடும்ப உறவுகளுடன் இணைந்து ஆரோக்கியமான நீடித்த ஆயுளையும் பெற்று சேவைகள் தொடர இறைவனை இறைஞ்சுகிறேன்.

**திருமதி. தயானந்தி கேதீஸ்வரன்,**
**ஆசிரியர்,**
**மே/மா/இராஜகிரிய றோ.க.த.வி,**
**இராஜகிரிய,**
**கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரன்பிற்குரிய எம் பாடசாலைப் பிரதி முதல்வருக்கு அன்புடன் அள்ளி வழங்கும் வாழ்த்து மடல்

பெயருக்கு வாழ்வார் சிலர்
பெயருக்கேற்ப வாழ்பவர் இவர்
எண்ணற்ற எண்ணங்களோடு
எழில் கொஞ்சும் சோலைகளாய்
கொஞ்சும் நெஞ்சங்களில் தஞ்சமடைந்து
வஞ்சமில்லாமல் வாஞ்சையுடன்
வாழ்ந்த நாட்கள் வரிசையிட்டு சொல்ல முடியாது

மரங்களில் நிழல்களாய்
மல்லிகையின் மணங்களாய்
நிமிர்ந்த நடையோடு
நேர் கொண்ட பார்வையால்
பாடசாலைக் காலங்கள்
நலமோடு நகர்ந்த விதம்
நட்புக்கு முத்தாய்ப்பாய் வித்திட்டது

வருடக்கணக்கில் வாரியிறைத்து
அள்ளித் தெளித்த அறிவான அரும்புகளை
மொட்டாக்கி மலராக்கி மாலையாக கோர்த்து
மணம் பரப்பச் செய்திட்ட ஆசான் நீங்கள்
தங்களின் மேலான ஆளுமைத்திறனும்
ஆழ்ந்த ஆங்கிலப் புலமையும் விசால மனமும்
பகைமை பாராட்டாத அன்பு குணமும்
கண்டு காதல் கொள்ளாதவரில்லை

தங்கள் பிரிவெண்ணி இதயம் கலங்கி
விழி நீர் சிந்தி உடல் சிலிர்த்து நிற்கின்றேன்
இருப்பினும் பிரிவென்பது பதவிக்குத் தான்
பாசத்திற்கில்லை இருக்கைக்குத் தான்
இதயத்துக்கில்லை என்பதால் நிம்மதியுறுகிறேன்.
உங்கள் ஓய்வுக் காலம் நிறைந்த
மன மகிழ்ச்சியோடும் நல்ல உடல்
ஆரோக்கியத்தோடும் இருக்க
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

என்றும் அன்புடன்
திருமதி.சம்பத் லக்றுவன் உஷாயினி,
ஆசிரியர்,
கிளி/கிளிநொச்சி ம.ஆ.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி. கலையரசி செல்வராசா அவர்களை மணிவிழா நாளில் (31.12.2021) வாழ்த்துகின்றேன்.

அறுபத்து நான்கு கலைகளிலும் ஒன்றே!
ஆசிரியக் குடும்பத்தின் கலையே!
ஆர்ப்பரவம் இல்லாத மலரே!
ஆங்கில பாடத்தின் அத்திவாரமே!

வாழ்க வளமுடன்

வளமான சிரேஸ்ட புத்திரியே!
வாழும் போதே வாழ்த்துப் பெறுவீரே!
வாயார மனதார வாழ்த்திடவே!
வாழ்ந்திடுவீர் நெடுநாட்களே!

வாழ்க வளமுடன்

சிறுவயதில் உன்னைக் காணவில்லைக் கலையே!
சேலை உடுத்து வரும் போது கண்டேனே!
செல்வராசா அண்ணாவின் மனையே!
செல்லப் பிள்ளைகளால் உயர்ந்திடுவீரே!

வாழ்க வளமுடன்

அகவை அறுபது என நினைக்காதே!
அகிலத்தில் உந்தன் சேவை என்றும் தேவையே!
ஆரம்பக் கல்விக்கு அடித்தளம் போட்டாலே!
ஆறாது பல்லாண்டு வாழ்ந்திடலாமே!

வாழ்க வளமுடன்

ஏணிப்படியாக தினம் இருக்கும் ஆசானே!
ஏற்றிடுவாய் மாணவச் செல்வங்களை நீயே
இன்று மணிவிழாக் கண்டு மகிழ்ந்திருக்கும் நாயகியே!
இன்முகமாய் மனந்திறந்து வாழ்க வாழ்க என வாழ்த்துகிறேனே.

வாழ்க வளமுடன்

**அன்புடன்**
**திருமதி. ஞா.பத்மநாதன்,**
**ஓய்வு நிலை ஆசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துக்கள்

அகரம் கற்று
அவனியில் போற்றிட
ஆங்கிலம் கற்பித்து
ஆளுமையை வளர்த்து

இலக்கை அடைய
இனிமையாகப் பேசி
ஈன்றோருக்குப் பெருமை சேர்த்து
ஈழம் போற்றும் அன்னையாக

உலகுடன் போட்டி போட
உவகையுடன் கற்பித்து
ஊக்கத்துடன் கற்பித்து
ஊருடன் அன்பாகப் பழகி

எட்டுத்திக்கும் சென்று நீங்கள்
எல்லையில்லா மகிழ்ச்சி கொண்டு
ஏணிப்படியாய் தாங்கி
ஏராளம் நட்பைப் பெற்று

ஐங்கரனைப் போற்றி தினமும்
ஐயம் நீக்கி வாழ்ந்து
ஒற்றுமையாக என்றும்
ஒழுக்கத்தை நிலைநாட்டி

ஓராயிரம் முறை முயற்சி செய்து
ஓங்கு புகழ் பெற்று
ஔடதம் போல்
ஔவை மொழி கற்று
இஃது இன்று மணிவிழா வாழ்த்துக்கள்

**திருமதி. ரோகிணி ஜெதீஸ்கரன்,**
**ஆசிரியர்,**
**கிளி/கிளிநொச்சி ம.ஆ.வி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம் கவர்ந்த மணிவிழா நாயகி

கிளிநொச்சி கல்வி வலயத்தில் ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்று 2021.12.31 ஆம் நாளுடன் ஓய்வு பெற்றுச் செல்லும் என் அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய திருமதி கலையரசி செல்வராசா ஆசிரியர் அவர்களுடைய மணிவிழா சிறப்பு மலருக்காக இவ் ஆக்கம் எழுதப்படுவதால் அவருடன் ஒன்றாகப் பழகிய பசுமையான நினைவுகளை செல்வ கலை அருவியில் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன்.

எந் நேரமும் இலட்சுமிகரமாகத் தோற்றமளிக்கும் கலா அக்கா வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டில் மிகவும் கண்டிப்பானவர்.

தனது பிள்ளைகளை சிறுவயதிலேயே செல்வராசா சேர் உடனும் தனது தாயாரான திருமதி தியாகராஜா தங்கம்மா (ஓய்வுநிலை அதிபர்) அவர்களுடனும் விட்டு விட்டு 1998 - 1999 காலப்பகுதியில் கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலையில் எம்முடன் பயிற்சி பெற்ற காலத்தில் இவருடைய பொறுமை, திறமை யாவற்றையும் அறிந்தோம். இவரது முத்து முத்தான தமிழ், ஆங்கில எழுத்துக்கள் இன்றுவரை முத்தாகவே இருக்கின்றன.

கலாசாலைக்காலம் முடிந்த பின்பும் கல்விமாணிப்பட்ட கற்கை நெறியில் அவருடன் ஒன்றாகக் கற்கும் வாய்ப்பு எனக்கு கிட்டியது. அன்றைய நினைவுகள் இன்றும் பசுமரத்தாணி போல் எனது மனதை விட்டகலவில்லை.

இவருடைய மணிவிழாக் காலத்தில் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் கற்பிக்கும் பாக்கியம் கிடைத்ததையிட்டு நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். தற்போது எமது வித்தியாலயத்தின் பிரதி அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெறப்போகும் காலம் வரை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ அதிபரோடு மிகக் கூடியளவு ஒத்துழைப்பவர்.
★ ஏனைய ஆசிரியர்களுடன் ஒத்துழைப்பவர்.
★ மாணவர்களுக்கு சிறந்த ஆலோசகர்.
★ பாடசாலைக்காகவும் மாணவர்களுக்காகவும் அர்ப்பணிப் புடன் செயற்படுபவர்.
★ மாணவர்களுக்கு உதவுவதில் களைப்படையாதவர்.
★ சமூகத்துடன் கூடிய தொடர்புகளைக் கொண்டிருப்பவர்.
★ பொறுப்புணர்வு மிக்கவர்.
★ தீர்மானம் எடுக்கும் ஆற்றல் மிக்கவர்.
★ நேர்மையானவர்
★ பக்கஞ்சாராதவர்.
★ அன்பு, தயவு, தாட்சண்யம் கொண்டவர்.
★ தொழில் விருப்புள்ளவர்.

போன்ற நல்லாசிரியருக்குரிய பண்புகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் உன்னத ஆசிரியர், 21ஆம் நூற்றாண்டிற்குப் பொருத்தமான உயிர்ப்பான (Active) கற்றலை மேம்படுத்தும் ஆசிரியராகப் பணியாற்றி சேவையில் இருந்து ஓய்வு பெறும் திருமதி கலையரசி செல்வராசா ஆசிரியர் அவர்கள் ஓய்வுநிலைக் காலத்திலும் தனது நன் மக்களுடனும், மருமக்கள் பேரக்குழந்தை களுடனும் மற்றும் குடும்ப உறவுகளுடனும் உடல், உள ஆரோக்கியத்துடனும் சீரும் சிறப்புடனும் நீடூழிகாலம் வாழ எல்லாம் வல்ல கனகாம்பிகை அம்பாளின் ஆசி வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி. ஜெயஶ்ரீ உதயகுமார்,**
**செயலாளர்,**
**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமையின் சிகரம் நீங்கள் பல்லாண்டு வாழ்க

திருமதி கலையரசி செல்வராசா ஆசிரியர் அறிவும் ஆற்றலும் நிறைந்திருந்த போதிலும் எதையும் பொறுமையாக கையாளும் திறமை கொண்டவர். எந்தச் செயலையும் யோசித்து முடிவெடுக்கும் திறமையும் ஏனையோரின் மனதினைப் பாதிக்காது செயற்பாடுகளைச் செய்யும் திறமையும் அவருக்கே உரியவை.

கோபத்தை வதனத்தில் காணாத கணவரையும் சிறந்த பண்புள்ள பிள்ளைகளையும் உருவாக்க அவரிடம் இருந்த முதன்மையான பண்பு பொறுமையாகும். சீற்றத்திலும் உரக்கப் பேசியதை இன்று வரை நாம் கண்டதில்லை. எந்தக் கருத்தையும் மற்றவர்களிடம் திணிக்காது ஏனையோரின் கருத்துக்களைக் கேட்டு அதற்கு மதிப்பளித்து செயலாற்றும் திறமை எம்மைக் கவர்ந்தவை.

வீட்டில் தலைமகளாய் பிறந்து ஏனையோரை வழிநடத்தியது போன்று பாடசாலையிலும் பிரதி அதிபராகச் செயற்பட்டு ஆசான்களுக்கும், மாணவர்களுக்கும் பல அறிவுரைகள் கூறியதோடு மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்ய ஊன்றுகோலாகச் செயற்பட்ட எமது கலா ஆசிரியர் என்றும் போற்றுதலுக்குரியவரே.

**திருமதி. லலிதா கலைறஞ்சன்,**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்னகைக்கரசி

மத்திய ஆரம்ப வித்தியாலய
மாணவ மணிகளை
பல்லாண்டு காலம்
பாசமாய் அரவணைத்து
ஆங்கில மொழியை
அன்போடு கலந்தூட்டி
கற்பித்து வந்த ஆசான்
கலையரசி செல்வராசா.

மாணவர் மனம் விரும்பி
கற்பிக்கும் நல்லாசான்
நடுநிலமை பேணி - தன்
கடமைகளைப் புரிந்து
களைப்பும் சலிப்புமின்றி
கருமமாற்றி நின்று
செய்யும் பணி அனைத்தும்
செவ்வனே செய்திடுவார்.

பாடசாலைச் சமூகம் கண்ட
பண்பான நல்லாசான்
அன்னைக்கு நிகராய்
அரவணைத்து எம்மோடு
அன்பாகப் பழகிடுவார்
அறிவுரைகள் கூறிடுவார்
எந்நாளும் எம் மனதில்
நிறைந்துள்ள நல்லாசான்.

நிறைவாகத் தன் சேவையினை
சிறப்பாகச் செய்து இன்று
அகவை அறுபதினை
அற்புதமாய் நிறைவு செய்து
மணிவிழாக் காணும் ஆசானை
மனம் நிறைய வாழ்த்துகிறோம்.
புன்னகைக் கரசியே
வாழ்க! வாழ்க! வாழ்க!

**திருமதி. யசோதா சசிபாபு,**
**ஆசிரியர்,**
**கிளி/கிளிநொச்சி ம.வி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளம் நிறைந்த நன்றிகள்

எமது பாடசாலையில் ஆரம்பக்கல்வி ஆங்கில ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெறும் திருமதி கலையரசி செல்வராசா அவர்களின் மணிவிழா நிகழ்வுக்காக

ஆசியுரை நல்கியவர்
வாழ்த்துரைகள் வழங்கிய கல்விப் புலம் சார்ந்தோர்
பட்டறிவு பகிர்ந்தோர்
மலருக்கு ஆக்கங்கள் அளித்தோர்
அச்சழகு செய்தோர்
விழாவில் கலந்து சிறப்பித்தோர்

அனைவருக்கும் எமது மனம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மணி விழாக்குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விமாணிப்பட்டக் கற்கை நெறியின்
பட்டமளிப்பு விழாவின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினருடன் மணிவிழா நாயகி



PIMD செயலமர்வில் கௌரவிப்புப் பெற்றபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவா பதிப்பகம், கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org